| O.S.No. 156/2021 | PW1: திரு. கவிதா<br>த/பெ. திரு. தட்சிணாமூர்த்தி | 11-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. என் தந்தையின் தந்தை பெயர் முருகன். என் தந்தை பெயர் குப்பன். என் தாத்தா முருகனும், சித்திரையும் அண்ணன் தம்பிகள். என் தாத்தாவிற்கு என் தந்தை மட்டுமே ஒரே மகன் ஆவார். என் சின்ன தாத்தா சித்திரையின் மகன் 3–ம் பிரதிவாதி கன்னியப்பன் ஆவார். 3–ம் பிரதிவாதியின் மகன்தான் 4–ம் பிரதிவாதி சுதாகர் ஆவார். என் தந்தையும், சித்தப்பாவும் குடும்ப சொத்துக்களை எந்த ஆண்டு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அவர்கள் பாகமே பிரித்துக்கொள்ளவில்லை.

2. என் தாவாவில் என் தாத்தாவும், சிறிய தாத்தாவும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டு அவரவர் பாகத்தினை தனித்தனியாக அனுபவித்து வந்ததாக தாவாவில் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை, ஆனால், இருவரும் பயிர் செய்து வந்தார்கள். என் தந்தை 1998–ல் இறந்துவிட்டார். என் தந்தை இறந்தவுடன் குடும்பத்தினை என் அம்மாதான் கவனித்து வந்தார் என்றால் இல்லை, நானும், என்னுடைய தங்கை அம்மாயியும்தான் கவனித்து வந்தோம்.

3. என்னுடன் பிறந்தவர் இளைய சகோதரர் மாரி, அபிராமி மற்றும் அம்மாயி ஆகும். என் தந்தை இறந்தபோது எனக்கு 19 வயது இருக்கும். அப்போது என் தம்பி மாரிக்கு 7 வயது இருக்கும். கடைசி சகோதரி அபிராமிக்கு 5 வயது இருக்கும். எனக்கு என் தங்கைகளுக்கு, என் தம்பிக்கு என் அம்மாதான் முன்நின்று திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் தம்பி மாரியின் மனைவி நமண்டி கிராமத்தை

சேர்ந்த கலையரசி ஆவார். என் தம்பி மனைவி கலையரசி இறந்துவிட்டார். 1, 2 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி வழக்கு சொத்து எங்களுடையது என்றும், சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டோம் என்றால் சரிதான். அதற்கு 1, 2 பிரதிவாதிகள் சொத்தினை ஒப்படைக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். வழக்கு சொத்தில் 5, 6 வருடங்களுக்கு முன்னர் 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் நாங்கள் அறிவிப்பு அனுப்பியதற்கு பிறகு, சொத்தினை ஒப்படைக்க சொல்லி கேட்டபோதுதான் அவர்கள் வீடு கட்டிய விவரமே எங்களுக்கு தெரியவந்தது.

4. 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் வீடு கட்டிக்கொண்டும், ஹாலோ பிளாக் கல் அறுவடை செய்யும் தொழிலும் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த வீடு மற்றும் ஹாலோ பிளாக் கல் அறுவடை செய்யும் இடமானது காஞ்சிபுரம் செல்லும் சாலைக்கு ஒட்டியவாறு அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். 3-ம் பிரதிவாதியான என் சித்தப்பா கன்னியப்பனுடன் எங்களுக்கு பேச்சுவார்த்தை இல்லை. 2-ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து சம்மந்தமாக நான் பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை, சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் செல்லவில்லை.

5. என் தாயார் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்றார் என்றால் அவர் போகவில்லை, என் அம்மாவிற்கு பக்கவாதம் வந்து படுத்த படுக்கையாக உள்ளார். என் தம்பி மாரி பத்திரப்பதிவு அலுவலகம் சென்றாரா என்றால் அவரும் செல்லவில்லை. அந்த சமயம் அவர் சின்ன பையனாக இருந்தார். நான் எனது வழக்கில் அடமான பத்திரம் என்று நம்பி கையெழுத்து போட்டேன் என்றும், அதில் என் மகள் கவிதாவும் சாட்சி

கையெழுத்து போட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. அந்த பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.3 எங்களது தரப்பில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

6. தாவா சொத்தில் கிணறு உள்ளது. அந்த கிணற்றினை வழக்கில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் எங்களது வழக்கில் கிணறு பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அந்த கிணற்றில் எங்களுக்கு பாதி பாகம் கன்னியப்பனுக்கு பாதி பாகம் உள்ளது என்றால் கன்னியப்பனுக்கு அதில் பாகம் இல்லை. கிணறு மற்றும் அதை சார்ந்த 1-வது அயிட்டத்தில் 10 சென்ட்டில் எனக்கு 5 சென்ட்டும், என் தகப்பனாருக்கு 5 சென்ட்டும், என் சித்தப்பா 4-ம் பிரதிவாதிக்கு 5 சென்ட்டும், கிணற்றில் தலா பாதியும் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல, என் அப்பாவிற்கு மட்டும்தான் பாத்தியம். 09.05.1986-ல் எனது தந்தை மேற்படி 10 சென்ட்டில் 5 சென்ட் மற்றும் கிணற்றில் பொதுவில் பாதியினை கன்னியப்பனுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் இல்லை, வாய்மொழியாக சொல்லியிருப்பார், ஆனால் கிரையம் செய்து கொடுக்கவில்லை.

7. கிணற்றில் எனது சித்தப்பா கன்னியப்பன் தண்ணீர் இறைத்து அனுபவித்து வந்தார் என்றால் தம்பி என்ற அடிப்படையில் எனது அப்பா அனுமதி அளித்ததின் அடிப்படையில் தண்ணீர் இறைத்து வந்தார். நான் தற்போது என் அம்மா வீடு உள்ள பல்லி கிராமத்தில் கடந்த 17 வருடங்களாக வசித்து வருகிறேன். தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் அனுபவித்து வரும் விஷயம் எங்களுக்கு கிரைய தேதி முதலே நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1-வது அயிட்ட சொத்திற்கு மட்டுமே பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மற்ற சொத்திற்கு

பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நிலத்திற்கு நிலவரி கட்டியதற்கு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ரசீதுகள் ஓலை வீட்டில் எறிந்துவிட்டது.

8. நாங்கள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் என் தாயாருக்கு பக்கவாதம் வந்துவிட்டது என்பதனை குறிப்பிடவில்லை என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது, அதனால் அதைப்பற்றி தெரியவில்லை. வழக்கு போடுவதற்கு முன்பு நானும், என் தாயாரும் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வந்து நாங்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் என் தாயார் வரவில்லை, நான்தான் வந்தேன். என் தாயார் இறப்பதற்கு 2 மாதத்திற்கு முன்புதான் அவருக்கு பக்கவாதம் வந்தது என்றாலும், நான் வழக்கிற்காக

20 வருடங்களாக அவர் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9. சொத்தினை கிரையம் செய்வதற்கு நானும் என் தம்பியும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு வந்தோம் என்றாலும், என் தம்பிக்கு கொடுத்த கிரைய தொகையினை வீட்டிற்கு வந்து என் தம்பி என் தாயாரிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையுடன் பிறந்த சகோதரி ஜெயலட்சுமி தற்போது உயிருடன் இல்லை, இறந்துவிட்டார். கண்ணன் மனைவி பாப்பம்மாள் என் தந்தையுடன் பிறந்தவர்தான். அவரும் தற்போது உயிருடன் இல்லை, இறந்துவிட்டார். எங்கள் ஊரில் நரசிம்மன் நாயுடு மகன் கஜேந்திரன் உள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

10. காழியூரில் கண்ணன் மகன் முனுசாமி எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. 2004-ல் 1, 2

பிரதிவாதிகளுக்கு எனது அம்மாவும், 3-ம் பிரதிவாதி கன்னியப்பன் விற்பனை செய்த பத்திரத்தில் நானும், எனது சகோதரர் மாரி, முனுசாமி, ஜெயலட்சுமி, பாப்பம்மாள், கஜேந்திரம் மற்றும் மூவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளர் என்றால் சரியல்ல. எங்கள் ஊரிற்கும் சிப்காட்டிற்கும் சுமார் 8 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சிப்காட்டில் சுமார் 7, 8 தொழிற்சாலைகள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா கிராம சொத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதாலும், அருகே சிப்காட் உள்ளதாலும், சட்டத்திற்கு விரோதமாக சொத்தினை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எங்களுக்கு உரிமையானது என்றும், சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் சரிதான்.

11. கிரைய தேதி முதல் 2-ம் பிரதிவாதிதான் தாவா சொத்தினை அடைந்து முழுவதுமாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் எங்களுக்கு 1 ஏக்கர் 40 சென்ட் உரிமை ஆகும். கன்னியப்பனுடக்கு எவ்வளவு உரிமையானது என்று எனக்கு தெரியாது. வீடுகள் எங்களுக்கும், கன்னியப்பனுக்கும் தனித்தனியாகத்தான் உள்ளது. 2-ம் பிரதிவாதிக்கு என் தாயார் குடும்பத்தலைவியாக இருந்துகொண்டு நன்கு தெரிந்துதான் கிரையம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

12. தாவா 1-வது அயிட்ட சொத்தில் கன்னியப்பனுக்கு 10 சென்ட் சொந்தம் என்றாலும், 2-ம் அயிட்ட சொத்து முழுவதும் கன்னியப்பனுக்கு சொநதம் என்றாலும், அதன் அடிப்படையில்தான் 2-ம் பிரதிவாதிக்கு என் தாயாரும், கன்னியப்பனும் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்தனர் என்றாலும், சரியல்ல. தாவா சொத்துக்கள் 2-ம் பிரதிவாதிக்கு

பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அச்சொத்துக்கள் 2-ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதால் நாங்க்ள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து நாங்கள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு பிறகு ஊரில் பஞ்சாயத்தார் முன்னிலையில் மத்தியஸ்தம் செய்யப்பட்டதால்தான் 1, 2பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.11 13:25:34 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**